## டிசம்பர் – 02 – சனி

### புனித பிபியானோ

**தானியேல் ஆகிய நான் உள்ளம் கலங்கினேன். மனக்கண்முன்னே தோன்றிய காட்சிகள் என்னை அச்சுறுத்தின. தானி. 7:15**

### முதல் வாசகம் : தானியேல் 7 : 15 – 27

தானியேல் ஆகிய நான் உள்ளம் கலங்கினேன். மனக்கண்முன்னே தோன்றிய காட்சிகள் என்னை அச்சுறுத்தின. அங்கு நின்று கொண்டிருந்தவர்களுள் ஒருவரை அணுகி, இவற்றிற்கெல்லாம் பொருள் என்ன?" என்று கேட்டேன். அவர் அவற்றின் உட்பொருளை எல்லாம் எனக்கு விளக்கிக் கூறினார். இந்த நான்கு விலங்குகளும் உலகில் எழும்பப்போகும் நான்கு அரசர்களைக் குறிக்கின்றன. ஆனால் உன்னதரின் புனிதர்கள் அரசுரிமை பெறுவர் அந்த அரசுரிமையை என்றும் ஊழ்ஊழிக் காலமும் கொண்டிருப்பர்." அதன்பின்னர், மற்ற விலங்குகளினின்று மாறுபட்டு, மிகவும் அஞ்சி நடுங்கவைக்கும் தோற்றத்துடன், இரும்புப் பற்களும் வெண்கல நகங்களும் கொண்டு. அனைத்தையும் தூள் தூளாக நொறுக்கி விழுங்கி, எஞ்சியதைக் கால்களால் மிதித்துப்போட்ட அந்த நான்காம் விலங்கைப்பற்றி அறிந்து கொள்ள விரும்பினேன். அதன் தலையில் இருந்த பத்துக் கொம்புகளைப் பற்றியும், மூன்று கொம்புகள் தன் முன்னிலையில் விழுந்து போக அங்கே முளைத்த கண்களும் பெருமையாகப் பேசும் வாயும் கொண்டிருந்த ஏனையவற்றைவிடப் பெரியதாகத் தோன்றிய அந்தக் கொம்பைப் பற்றியும் தெரிந்து கொள்ள விரும்பினேன். நான் பார்த்துக் கொண்டிருக்கையில், அந்தக் கொம்பு புனிதர்களுக்கு எதிராகப் போர் புரிந்து அவர்களை வென்றது. தொன்மை வாய்ந்தவர் வந்து உன்னதரின் புனிதர்களுக்கு நீதி வழங்கும் வரையிலும் உரிய காலத்தில் புனிதர்கள் அரசுரிமை பெறும் வரையில் இவ்வாறு நடந்தது. அவர் தொடர்ந்து பேசினார் அந்த நான்காம் விலங்கோ உலகில் தோன்றப் போகும் நான்காம் அரசைக் குறிக்கின்றது இது மற்றெல்லா அரசுகளையும் விட வேறுபட்டதாகும். உலக முழுவதையும் அது மிதித்துத் தூள்களாக நொறுக்கி விழுங்கிவிடும். அந்தப் பத்துக் கொம்புகளோ இந்த அரசினின்று தோன்றவிருக்கும் பத்து மன்னர்களைக் குறிக்கின்றன. அவர்களுக்குப் பிறகு மற்றொருவன் எழும்புவான் முந்தினர் களைவிட வேறுபட்டிருப் பான் மூன்று அரசர்களை முறியடிப்பான் அவன் உன்னதர்க்கு எதிரான சொற்களைப் பேசுவான் உன்னதரின் புனிதர்களைத் துன்புறுத்துவான் வழிபாட்டுக் காலங்களையும் திருச்சட்டத்தையும் மாற்ற நினைப்பான். மூன்றரை ஆண்டுகள் புனிதர்கள் அவனது கையில் ஒப்புவிக்கப்படுவர். ஆனால், நீதிமன்றம் தீர்ப்பு வழங்க அமரும் அவனது ஆட்சி அவனிடமிருந்து பறிக்கப்பட்டு, எரியுண்டு ஒன்றுமில்லாது அழிக்கப்படும். ஆட்சியும் அரசுரிமையும், வானத்தின் கீழுள்ள உலகனைத்திலும் உள்ள அரசுகளின் மேன்மையும் உன்னதரின் புனித மக்களுக்குத் தரப்படும். அவர்களது அரசு என்றென்றும் நிலைக்கும் அரசு எல்லா அரசுகளும் அவர்களுக்குப் பணிந்து கீழ்ப்படியும்.

**பதில்பாடல்:** என்றென்றும் ஆண்டவரைப் புகழ்ந்து பாடிப் போற்றுங்கள்

### நற்செய்தி : லூக்கா 21 : 34 - 36

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களுக்குக் கூறியதாவது: "உங்கள் உள்ளங்கள் குடிவெறி, களியாட்டத்தாலும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய கவலையினாலும் மந்தம் அடையாதவாறும் அந்நாள் திடீரென வந்து ஒரு கண்ணியைப்போல் உங்களைச் சிக்க வைக்காதவாறும் எச்சரிக்கையாய் இருங்கள். மண்ணுலகு எங்கும் குடியிருக்கும் எல்லார்மீதும் அந்நாள் வந்தே தீரும். ஆகையால் நிகழப் போகும் அனைத்திலிருந்தும் தப்புவதற்கும் மானிடமகன் முன்னிலையில் நிற்க வல்லவராவதற்கும் எப்பொழுதும் விழிப்பாயிருந்து மன்றாடுங்கள்" என்றார்.

**தியானம்:** கிறிஸ்து பிறப்புவிழாவிற்கு இன்னமும் 22 நாட்களே மீதியாகவுள்ளன. திருவருகைக் காலத்தின் முதல் சனி நற்செய்தி இறைமகன் இயேசுவின் மறுவருகையைக் குறித்து விழிப்பாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கிறது. விழிப்பாயிருந்து செபியுங்கள் என இறைமகன் கிறிஸ்து பத்துக் கன்னியர் உவமை (மத்தேயு25:1-13)இ மற்றும் விழிப்பாயிருக்கும் பணியாளர் உவமை (லூக்12:35-40) என்பவற்றோடு, அவர் பாடுபடுவதற்கு முன்னதாகவும் கேட்பதனை (லூக் 22:46) நாம் சிந்தனைக்கு எடுப்பது மிக மிக முக்கியம். வரவிருக்கும் கிறிஸ்து பிறப்பு விழாவிற்காக எத்தனையோ ஆயத்தங்களை நாமாகவே அக்கறையெடுத்து இரவிரவாக விழித்திருந்து செய்கின்றோம். அது எமது இரத்தத்தோடு ஊறிய மனித இயற்கை. எனினும், கிறிஸ்துவின் மறு வருகைக்காக எத்தனை நாட்கள் மீதி உள்ளன என அக்கறையாக இருக்கின்றோமா? இன்றைய நற்செய்திக்கமைவாக இறைமகன் கிறிஸ்து எம்மை இரவெல்லாம் விழித்திருந்து செபிக்க அழைக்கவில்லை. மாறாக அவரது மறு வருகைக்காக எம்மை பாவமற்ற நிலையில் இருக்குமாறும், சத்துருவானவனின் பாவக்கட்டுக் களுக்குள் அகப்படாது விழிப்பாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கின்றார். எனவே, திருவருகைக் காலத்தின் முதல் வாரத்திலிருந்தே இயேசு ஆண்டவரின் மறு வருகைக்கென எம்மைத் தயார் செய்வோம். செபத்தோடு கூடிய எமது மன்றாட்டுக்களை அவரிடம் சமர்ப்பிப்போம். "நாமோ அவரது மேய்ச்சலின் மக்கள், நாம் அவர் பேணிக் காக்கும் ஆடுகள்" என்ற உணர்வோடு எமது ஆன்மாவையும், உள்ளத்தையும் சுத்தப்படுத்தி வழிநடத்த வல்லவரிடம் எம்மையே முற்றுமுழுதாக சரணாகதியாக்குவோம். ஏனெனில் எமது பாவங்களுக்காக கிறிஸ்து மீண்டும் பிறக்க மாட்டார். மாறாக மண்ணுலகில் தாம் மாட்சிமையோடு வரும்போது எம்மை விழிப்பாயிருக்க அழைக்கின்றார். வல்லமையின் தேவன் நல்லவைகள் செய்திடுவார். எனவே நிகழப்போகும் அனைத்திலிருந்து தப்புவதற்கு ஆயத்தமாக தகுந்த பாவப்பொறுத்தல் அருட்சாதனைத்தைப் பெற்றுன்கொள்வோம். மனந்திரும்புவோம்.